**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 386/2023 |
| Prosecution Witness | : | அ.சா. 1 |
| Name | : | அசோகன் (காவல் உதவி ஆய்வாளர்) |
| Father's/Husband Name: | : | முத்து |
| Address : | : | செட்டிக்குளம் |
| Age | : | 53/2024 |

தேதி: 06 /08/2024

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது (**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**).

நான் தற்போது பெரம்பலூர் மாவட்ட குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது 28/06/2023 ஆம் தேதி வடக்குமாதேவியைச் சேர்ந்த மணிகண்டன் மனைவி பாக்கியபிரியா என்பவர் தனது 2 வயது மகனை தன் கணவன் மணிகண்டன் குடிபோதையில் தூக்கிக்கொண்டு வந்ததாகவும், இருவரும் குடும்ப பிரச்சனை காரணமாக பிரிந்து வாழ்ந்து வருவதால் தனது குழந்தைக்கு பாதுகாப்பு இல்லை என்று குழந்தையை மீட்டுத் தருமாறு கொடுத்த புகாரின் பேரில் பெரம்பலூர் காவல் நிலையத்திற்கு எதிரே உள்ள டீக்கடை அருகில் மணிகண்டன் என்பவர்

குழந்தையை வைத்துக்கொண்டிருந்த விவரம் தெரிந்து மாலை 4.30 மணிக்கு டீக்கடைக்கு சென்று மணிகண்டன் கையிலிருந்த குழந்தையை வாங்கி அவருடைய மனைவியிடம் கொடுத்தேன். அதற்கு அவருடைய கணவர் மணிகண்டன் ஏன்டா தேவுடியா மகனே குழந்தையை வாங்கிக் கொடுத்த என்று அசிங்கமாக திட்டி நான் தடுத்த போது அவருடைய இடுப்பிலிருந்த கத்தியை எடுத்து காட்டி உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியும், என்னை பணிசெய்யவிடாமல் தடுத்தார். அந்த இடத்தில் கூட்டம் கூடவே அங்கிருந்து அவர் சென்றுவிட்டார். இதுகுறித்து நான் காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரிலும், என்னுடைய விசாரணையிலும் தற்போது நீதிமன்றத்தில் சொன்னதைத் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் மனைவி மாலை 4.00 மணிக்கு புகார் கொடுத்தார். புகார் மனுவிற்கு நான் ரசீது கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மனுக்கொடுக்கும்போது எதிரி சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் இல்லை. எதிரியின் மனைவி என்னிடம் வந்து சொன்னதின் போில்தான் எதிரி சம்பவ இடத்திற்கு வந்தது எனக்குத் தெரியும். அவரை நான் விசாரணைக்கு அழைத்திருக்க வேண்டும் என்றால் அவர் போதையில் இருந்ததால் நான் விசாரணைக்கு அழைக்கவில்லை. நான்

முறைப்படி விசாரணை செய்யாமல் சட்டத்திற்கு முரணாக குழந்தையை வாங்கி அவருடைய மனைவியிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் 10 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். எதிரியின் மனைவியுடைய பேச்சை கேட்டு நான் பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர் என்னை பணி செய்யவிடாமல் தடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் இடுப்பில் எந்த கத்தியும் வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையம் அருகில் இருப்பதால் பொய்யான வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

JM-I PBLR